**23 விருத்த குமார் பாலரான படலம**

விக்ரமபாண்டியனுடையஆட்சிகாலத்தில்மதுரைமாநகரில்வாழ்ந்து வந்த விருபாக்ஷர் என்றஅந்தணருக்கும் அவர் மனைவி சுபவிரதைக்கும் தவப்புதல்வியாகப் பிறந்தாள் கௌரி. ஐந்துவயதிலேயே பிறவிப்பிணியை நீக்கும் வழியைத் தன் தந்தையிடம் கேட்க, அவரும் பராசக்தி மந்திரத்தை அவளுக்கு ஓதினார். கௌரியும் அதனை நாள் தவறாமல் ஜபித்து வந்தாள்.

விருபாக்ஷர் ஒரு நாள் தன் வீட்டிற்கு உஞ்சவிருதிக்கு வந்த ஓர் வைணவ பிரம்மசாரிக்கு, அவனது குலகோத்திரம் அறியாமல், எவரையும் கலந்தாலோசிக்காமல், தன் மகள் கௌரியை தாரை வார்த்துக் கொடுத்தார்.

வைணவர்களான தங்களுக்கு, சிவவேடமும், சிவசிந்தனையும் கொண்ட கௌரி மருமகளாக வந்தது, அவளது புக்ககத்தார்களுக்கு கட்டோடுபிடிக்கவில்லை. அவளைமிகவும்துன்புருத்தினர். கௌரியும், தான்சிவத்தொண்டுஏதும்செய்யஇயலாமல்போனதைக்குறித்துமிகவும்வருந்தினாள்.

கௌரியின்வாட்டத்தைப்போக்கஎண்ணியசிவபெருமான்வேதியர்வேடம்தரித்து,அவள்இல்லம்சென்று, தன்பசியாற்றும்படிகேட்டார். அச்சமயம்கௌரியின்மாமியாரும்மாமனாரும்அவளைத்தனியே விட்டுவிட்டு, வீட்டைப் பூட்டிக் கொண்டு வெளியூரில் நடக்கும்திருமணத்திற்குச் சென்று விட்டனர். கௌரி இதனால் தன்னால் ஏதும் செய்ய இயலாமையைசிவனடியாரிடம் கூறி வருந்தினாள். சிவனடியார், கௌரி பூட்டைத் தொட்டதும் பூட்டுதானாகவே திறக்கும், பிறகு அவள் உணவு சமைக்கலாம் என்றார். அவ்விதமே செய்து கௌரிசிவனடியாருக்கு அன்புடன் உணவு படைத்தாள்.

தேவாமுதம்போல்இருந்தஉணவைஅருந்தியதும்வேதியர்மூப்புநீங்கி மன்மதனைப் போல்காட்சியளித்தார். வாலிபனைக் கண்ட கற்பில் சிறந்த கௌரி நடுங்கினாள்.

அச்சமயம்வெளியூர்சென்றஅவளதுமாமிமுதலானோர்திரும்ப, காலின் பெருவிரலைச் சுவைக்கும் பாலகனாய், விரித்த ஆடையின் மீது கிடந்தார் அதே வேதியர். தாயை பிரிந்தசேயைப் போல் குழந்தை அழ, குழந்தையைப் பற்றிய விவரம் கேட்டாள் அவள் மாமி. கௌரி தேவதத்தன் என்பவன் தன் மனைவியுடன்அங்குவந்து, குழந்தையைசிறிதுநேரம்பார்த்துக்கொள்ளுமாறுவேண்டியதாகச் சொன்னாள். சிவனை ஆராதிப்பவனுடைய குழந்தையின் மேல் அன்புக் கொண்டதால் கௌரி தங்களுக்கு வேண்டாதவளாகி விட்டதால் குழந்தையுடன் வீட்டை விட்டு துரத்தினாள் கௌரியின் மாமியார்.

வருந்திய கௌரி சோமசுந்தரரை மனத்தில் தியானித்து, உமா தேவியாரின் மந்திரத்தை உச்சரித்தாள். அமுத குழந்தை மறைந்து ரிஷபவாகனத்தில் சிவபெருமானாக மாறிஉமாதேவியுடன் ஆகாயத் தில் காட்சியளித்தார். இக்காட்சியைக் கண்ட கௌரி ஆனந்தகடலில் மூழ்க ஐயன் உமாதேவியின் சாரூபப் பதவியை அளித்தார்.

**பல்லவி**

பராசக்தி மந்திரத்தை மகள் கௌரிக்கு உபதேசித்து
வைணவனுக்கு மண முடித்தான் விரூபாக்கன்

**அனுபல்லவி**

நிராதரவாய் வீட்டில் தனியாய் கௌரி இருக்க
நீண்டதாடி கொண்ட சிவனடியாகி பிட்சைக் கேட்டாய்

**சரணம்**

தொட்டே பூட்டைத் திறந்து இட்ட உணவை அருந்தி
சட்டென குமாரனுமாகி விரல் சப்பும் பாலனுமாக
மட்டற்ற கோபமுடன் மாமி அவர்களைத் துரத்த
மங்கை உமையுடன் சேர குழந்தையும் நீயானாய்